## குழு – 1: எனக்குத் தெரியும்

பங்கேற்பாளர்களிடம் சில மின்னட்டைகளைக் கொடுத்து அதில் இடம்பெற்றுள்ளவை குறித்த கருத்துகளை வழங்கச் செய்தல்.

| கலைத்திட்ட எதிர்பார்ப்புகள் |
|---|

| குறைந்தபட்சக் கற்றல் இலக்குகள் |
|---|

| கற்றல் நோக்கங்கள் |
|---|

| அடைவு ஆய்வு |
|---|

| கற்றல் விளைவுகள் |
|---|

### 2 : குறியீட்டை விளக்குவேன்

பங்கேற்பாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள மின்னட்டையில் உள்ள குறியீட்டிற்குப் பொருத்தமான கற்றல் விளைவு எண்ணை விளக்கிக் கூறச்செய்தல்.

**T604**

**M905**

**SST821**

**EVS302**

**E711**

## குழு – 3 : வேறுபடுத்துவேன்

பங்கேற்பாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு கலைத்திட்ட எதிர்பார்ப்புகளுக்குச் சரியான கற்றல் விளைவுகளைப் பொருத்தச் செய்தல்.

**கலைத்திட்ட எதிர்பார்ப்புகள்**

- **செய்தித்தாள்கள்/இதழ்கள் போன்றவற்றில் வெளியிடப்படும் செய்திகள் மற்றும் கட்டுரைகளை அறிதல் மற்றும் புரிதல்.**
- **பல்வேறு சூழல்களில் பயன்படுத்தப்படும் மொழியின் சந்தம், ஒலி இயைபு போன்ற நுட்பமான கூறுகளைப் புரிந்துகொள்ளுதல்.**
- **எந்தவொரு புதிய கட்டுரை/ நூல் போன்றவற்றைப் படித்துப்புரிந்து கொள்ளும் பேரார்வம்.**
- **சமூகப் பண்பாட்டு விழுமியங்கள் பற்றிய தமது விருப்பத்தை வெளிப்படுத்தல்.**

**கற்றல் விளைவுகள்**

- **ஒருநூலை ஆழ்ந்து படித்து அந்நூலின் மையக்கருத்தை ஊகித்தறிதல்**
- **தாங்கள் பார்த்த, கேட்ட உள்ளூர் சமூக நிகழ்வுகள், செயல்பாடுகள், சடங்குகள் போன்றவற்றைப் பற்றி தயக்கமின்றி வினா எழுப்பவும், கலந்துரையாடவும் செய்தல்.**
- **செய்தித்தாள், இதழ்கள், கதைகள், இணையத்தில் காணப்படும் தகவல்கள், கட்டுரைகள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொண்டு தமது விருப்பு வெறுப்புகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்தல் (பொது எழுத்து முறை அல்லது பிரெய்லி எழுத்து முறை)**
- **மொழி பற்றிய நுட்பங்களை அறிந்து அவற்றைத் தம் மொழியில் எழுதும் போது பயன்படுத்தல்.(சொற்களை மாற்றுவதன் மூலம் பாடலின் சத்தத்தில் ஏற்படும் ஓசை நயத்தைப் புரிந்துகொள்ளுதல்)**

## குழு -4 : தொடர்புபடுத்துவேன்.

பங்கேற்பாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு கற்றல் நோக்கங்களுக்குப் பொருத்தமான கற்றல் விளைவுகளை இணைக்கச் செய்தல்.

| |
|---|
| **கற்றல் நோக்கங்கள்**<br>• **மீள்/மீளா மாற்றங்களை மாற்றங்களை வகைப்படுத்துதல்.**<br>• **கழிவுகளை மேலாண்மை மற்றும் மறுசுழற்சி செய்வது எவ்வாறு என்பதையும் ஆய்ந்தறிந்து கொள்ளுதல்.**<br>• **வெப்பநிலைமானியைப் பயன்படுத்தி வெப்பநிலையினை அளவிடுதல்.**<br>• **மின்சுற்றுப்படம் வரையக் கற்றுக் கொள்ளுதல்**<br>• **நீரை சேமிக்கும் முயற்சியை மேற்கொள்ளுதல்.** |

## கற்றல் விளைவுகள்

| |
|---|
| வெப்ப நிலை, நாடித்துடிப்பு, நகரும் பொருள்களின் வேகம், தனி ஊசலின் அலைவு நேரம் போன்றவற்றை அளந்து கணக்கீடு செய்தல். |
| சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொள்ளல், எ.கா., உணவு, நீர், மின்சாரம் ஆகியவை வீணாவதையும் கழிவுப் பொருள்கள் உருவாதலையும் குறைத்தல்; மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வைப் பரப்புதல்; தாவரங்களைப் பராமரித்தல் போன்றவை. |
| பாகங்களுடன் படங்கள் / செயல் வரைபடங்கள் வரைதல், எ.கா., மனிதன், தாவரங்களின் உறுப்பு மண்டலங்கள்; மின் சுற்றுகள்; பரிசோதனை வடிவமைப்புகள்; பட்டுப்பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி போன்றவை. |
| பொருள்களைக் கரையும் பொருள்கள், கரையாப் பொருள்கள்; ஒளி ஊடுருவும், ஒளிகசியும், மற்றும் ஒளிபுகாப் பொருள்கள்; மாற்றங்களை மீள்மாற்றம் மற்றும் மீளாமாற்றம்; தாவரங்களைச் சிறு செடிகள், புதர்ச்செடிகள், மரங்கள், படர்கொடிகள், ஏறுகொடிகள்; வாழிடத்தின் உட்கூறுகளை உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகள்; இயக்கத்தினை நேரான இயக்கம், வட்ட இயக்கம், கால ஒழுங்கு இயக்கம் போன்ற உற்றுநோக்கக்கூடிய பண்புகளின் அடிப்படையில் பொருள்கள், உயிரினங்களை வகைப்படுத்துதல். |
| கற்றுக்கொண்ட அறிவியல் கருத்துகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துதல், எ.கா., அமிலத் தன்மையைக் கையாளுதல்; மண்ணைப் பரிசோதனை செய்து, வளப்படுத்துதல்; மண் அரிப்பைத் தடுக்கும் வழிமுறைகளைக் கையாளுதல்; உடல இனப்பெருக்கம் வாயிலாகச் சாகுபடி செய்தல்; இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மின்கலங்களைச் சரியான வரிசையில் கருவிகளுடன் இணைத்தல்; பேரிடர்களின் போதும் அவற்றிற்குப் பிறகும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; மாசுற்ற நீரை மறு சுழற்சி செய்வதற்கான முறைகளைப் பரிந்துரைத்தல் போன்றவை. |

## குழு - 5 : வரிசைப்படுத்துவேன் (படிநிலை வளர்ச்சி)

பங்கேற்பாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பாடத்தில் உள்ள பாடக்கருத்து (Concept) ஒரு வகுப்பில் இருந்து எவ்வாறு அடுத்த வகுப்பிற்குப் படிநிலை வளர்ச்சியில் அமைகிறது என்பதை வரிசைப்படுத்தச் செய்தல்.

எ.கா.

பாடம் : அறிவியல்

பாடத்தலைப்பு : அளவீடுகள்

((**வகுப்பு – 6**) (வகுப்பு – 7) (வகுப்பு – 8) (வகுப்பு - 9) )

| |
|---|
| **அன்றாட வாழ்வில் அளவீடுகளின் அவசியம் நீளம், நிறை, காலம், வரையறைகள் மற்றும் அளவீட்டு கருவிகளின் மாதிரிகளை உருவாக்குதல்** |

| |
|---|
| **அடிப்படை அளவுகளில் இருந்து, வழி அளவுகள் மற்றும் அலகுகளை அடையாளம் காணல்** |

| |
|---|
| **அடிப்படை அளவுகளான வெப்பநிலை, பொருளின் அளவு, மின்னோட்டம், ஒளிச்செறிவு ஆகியவற்றை பற்றி அறிதல்** |

| |
|---|
| **SI அலகுகளை எழுத பின்பற்றப்படும் விதிமுறைகளை தெரிந்து கொள்ளுதல் மற்றும் அளவீட்டு கருவிகளான வெர்னியர் அளவி, திருகு அளவி, சுருள் வில் தராசு, போன்றவற்றின் மூலம் அளவிட அறிந்து கொள்ளுதல்** |